# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## அசல் வழக்கு எண். 143/2020

சாட்சி : DW– 1
பெயர் : திரு. நாச்சியப்பன் தேதி : 25.03.2025

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார்.)

**குறுக்குவிசாரணை**:– (வாதி தரப்பில்)

நான் எடப்பாடி தாலுக்கா, கொங்கணாபுரத்தில் குடியிருக்கிறேன். தாவா சொத்து சேலம், அழகாபுரத்தில் உள்ளது. தாவா சொத்து மற்றும் அதற்கு பக்கத்தில் உள்ள சொத்துக்கள் ஆதியில் சின்னப்பன் மகன் காலீப் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்தது. அதன் சர்வே எண். 22/2 ஆகும். சர்வே எண். 22/2ன் மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 1.48 ஆகும். 15.09.1989 தேதியில் சின்னப்பன் மகன் காலீப் என்பவர் மூன்று நபர்களுக்கு 37 சென்ட் நிலத்தை கிரயம் செய்து கொடுத்துள்ளார். அந்த கிரய பத்திரத்துடன் பிளான் இணைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் நான் அதை கவனிக்கவில்லை.

15.09.1989 தேதியிட்ட கிரய பத்திரத்தில் சொத்தின் சர்வே எண். 22/2 என்பதற்கு பதிலாக 22/1 என குறிப்பிடப்பட்டுள்ளது பற்றி எனக்கு தெரியாது. 15.09.1989 தேதியிட்ட கிரய பத்திரத்தில் உள்ள சர்வே எண்ணின் பிழையை சரி செய்வதற்காக 31.01.1991 தேதியில் காலீப்பும் மற்றும் மூவரும் ஒரு பிழை திருத்தல் பத்திரம் எழுதிக்கொண்டுள்ளார்கள் என்றால் சரிதான். 37 சென்ட் நிலத்திற்கு சதுரடிகள் 16,095 என்றால் சரிதான். சுரேந்திரன், சம்பு, சாந்தி தனஞ்செயன் ஆகியோர்கள் கிரயம்பெற்ற 37 சென்ட் நிலத்தை வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்துகொண்டார்கள் என்றால் சரிதான். அந்த வாய்மொழி பாகப்ரிவினையில் மேற்குபுறம் சாந்தி தனஞ்செயன் என்பவருக்கு 4,800 சதுரடிகள் ஒதுக்கப்பட்டது

என்றால் சரிதான். 15.09.1989 தேதியில் கிரயம் பெற்றபொழுது வடக்கே நடேசன் என்பவரின் விவசாய நிலம் இருந்தது.

(வாதி தரப்பில் கேட்டுக்கொண்டதன்பேரில் குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

Taken down by me in open Court and dictated to the Typist by me and read over to the deponent and acknowledged by him/her to be correct.

Sd./- N. Ramakrishnan
I Additional District Judge,
Salem.